# P5 - மாதிரி கட்டுரை & படக்கட்டுரை பயிற்சி வினா

## பொருளடக்கம்


| தொகுதி | மாதிரி தலைப்புக் கட்டுரை | படக்கட்டுரை பயிற்சி | | பக்கம் |
|---|---|---|---|---|
| | | கருப்பொருள் | இடம் | |
| 1 | நான் செய்த பொறுப்பற்ற செயல் | பொறுப்பற்ற செயல் | வீடு | 1 - 8 |
| 2 | எனக்குத் தன்னம்பிக்கை அளித்த சம்பவம் | தன்னம்பிக்கை | நடன வகுப்பு | 9 - 16 |
| 3 | என் நண்பர்கள் எனக்குச் செய்த உதவி | நட்பு | வகுப்பறை | 17 - 24 |
| 4 | என் சினத்தால் ஏற்பட்ட பாதிப்பு | சினம் காத்தல் | பேரங்காடி | 25 - 32 |
| 5 | எனக்கு நடந்த இன்ப அதிர்ச்சி | தந்தையின் அன்பு | படிப்பு அறை | 33 - 40 |
| 6 | எனக்கு ஊக்கம் கொடுத்த சம்பவம் | ஊக்கம் | சமூக ஊடகம் | 41 - 48 |
| 7 | நான் காப்பாற்றிய செல்லப் பிராணி | உயிரினங்களை நேசித்தல் | அடுக்குமாடிக் கீழ்த்தளம் | 49 - 56 |
| 8 | என் பேராசையால் எனக்கு ஏற்பட்ட பாதிப்பு | பேராசை | பனிக்கூழ் கடை | 57 - 64 |
| 9 | என் கவனக்குறைவான செயல் | கவனக்குறைவு | சமையலறை | 65 - 72 |
| 10 | என் ஆர்வத்தால் எனக்குக் கிடைத்த பரிசு | ஆர்வம் | புகைப்பட வகுப்பு | 73 - 80 |
| 11 | நான் பிறருக்கு உதவிய செயல் | பிறருக்கு உதவுதல் | சாலையோரம் | 81 - 88 |
| 12 | அதிகமாக உண்டதால் எனக்கு ஏற்பட்ட விளைவு | உடல் ஆரோக்கியம் | பள்ளி திடல் | 89 - 96 |
| 13 | விழிப்புணர்வின்றி நடந்துக்கொண்டதால் ஏற்பட்ட விளைவுகள் | விழிப்புணர்வு | பெருவிரைவு ரயில் நிலையம் | 97 - 104 |
| 14 | உதவியால் ஏற்பட்ட மனநிறைவு | உதவும் குணம் | அண்டை வீடு | 105 - 112 |
| 15 | எனக்குக் கிடைத்த ஊக்கம் | பெற்றோரின் ஊக்கம் | நீச்சல் குளம் | 113 - 120 |
| 16 | பரிவு காட்டியதால் எனக்குக் கிடைத்த பரிசு | பரிவு | விளையாட்டு மைதானம் | 121 - 128 |
| 17 | நான் மறக்க நினைக்கும் நாள் | நாசவேலை | பேருந்து நிலையம் | 129 - 136 |
| 18 | என் விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றி | விடாமுயற்சி | மருத்துவமனை | 137 - 144 |
| 19 | நான் விரும்பி ஈடுபட்ட நேர்மையான செயல் | நேர்மை | நூலகம் | 145 - 152 |
| 20 | நான் தாயின் அன்பை உணர்ந்த நாள் | தாயின் அன்பு | கடைத்தொகுதி | 153 - 160 |


WORDSMITH BEYOND LEARNING

**தொகுதி 1**

மாதிரிக் கட்டுரை **கருப்பொருள்:** பொறுப்பற்ற செயல்

## நான் செய்த பொறுப்பற்ற செயல்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- எப்பொழுது அந்த பொறுப்பற்ற செயல் நடந்தது ?
- எப்படி அந்த பொறுப்பற்ற செயலில் ஈடுபட்டாய் ?
- ஏன் அவ்வாறு பொறுப்பற்று நீ நடந்து கொண்டாய் ?
- அந்த சம்பவத்திலிருந்து நீ கற்றுக் கொண்ட பாடம் என்ன ?

"வணக்கம் நண்பா! **1. காற்று இதமாக வீசுகிறது, சூரியனும் மங்கலாகத் திகழ்கிறான். 2. மிதிவண்டி ஓட்டுவதற்குப் பொருத்தமான நாள்; என்ன சொல்கிறாய்?"** என்று கூறிய பாலு தன் **3. ஆருயிர் தோழன்** மணியின் வீட்டு வாசலில் நின்றான். மணிக்கு பாலுவின் யோசனை பிடித்திருந்தது. **4. உடலும் உயிரும் போல் ஒற்றுமையாகத் திகழ்ந்த** இருவரும் **தத்தம்** மிதிவண்டிகளின் மீது ஏறிப் புறப்பட்டார்கள்.

இணைபிரியாத் தோழர்கள் புதுப்பூங்காவிற்குச் செல்ல திட்டம் தீட்டினார்கள். ஆனால், பூங்காவை அடைந்தபோதுதான் அங்கு மிதிவண்டி ஓட்டக்கூடாது என்ற எச்சரிக்கைப் பலகை இருப்பதை அறிந்தனர். ஏமாற்றம் அடைந்த மணி சோகம் தோய்ந்த முகத்துடன் பாலுவை நோக்கினான். பாலுவும் அவனுக்கு ஆறுதல் கூறி வேறு எங்கேயாவது மிதிவண்டி ஓட்டிக் **களிக்கலாம்** என்று யோசனை கூறினான்.

1. வர்ணனை - Creative Description
2. உரையாடல் - Dialogue
3. சொற்களஞ்சியம் - Catchy Words
4. இனிய தொடர் - Good Phrase

மணியின் முகத்தில் உடனே **1. புன்னகைப் பூத்தது**. அவன் சாலையில் மிதிவண்டி ஓட்டப்போவதாகக் கூறி அப்படியே செய்ய ஆரம்பித்தான். சாலையில் வாகனம் எதுவும் இல்லை. ஆனாலும் பாலுவுக்குத் தன் தோழனின் செயல் தவறு என்று தோன்றியது. **2. அவன் உடனே "வேண்டாம் மணி! சாலையில் விளையாடுவது நமக்கும் ஆபத்து, நம்மைச் சுற்றி இருப்போருக்கும் ஆபத்து!" என்று மணியை எச்சரித்தான். அவன் சொற்கள், 3. செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல் பயன் இல்லாமல் போயின.** மணி திரும்பி பார்த்து அவனை நிறுத்த முயன்ற பாலுவின் **கோழைத்தன**த்தைக் கேலி செய்யத் தொடங்கினான். **அத்தருணம்**, **4. "ஆஆஆஆஆ!" என்று வானத்தைப் பிளக்கும் சத்தம் ஒலித்தது.**

1. சொற்களஞ்சியம் - Catchy Words
2. உரையாடல் - Dialogue
3. உவமைத்தொடர் - Metaphor
4. ஒலிக்குறிப்பு - Expression Phrase

மணி அதிர்ச்சியில் **1. ஆடாமல் அசையாமல், திகைத்து நின்றான்.** அவன் ஒரு வயதான மூதாட்டியை இடித்துத் தள்ளிவிட்டதை உணர்ந்தான். அவர் துடித்துக் கொண்டிருந்தார்; அவரின் பையில் இருந்த பழங்கள் கீழே **இரைந்து** கிடந்தன. மூதாட்டி வலியால் தவித்துக் கொண்டிருந்ததைக் கண்ட பாலு ஓடிச் சென்று அவருக்கு உதவ முயன்றான். ஆனால் மூதாட்டியாலோ வலியைத் தாங்கிக் கொண்டு எழுந்திருக்க இயலவில்லை. திடீரென்று அவர் மயங்கி விழுந்தார். அச்சமயம் வரை பயத்தில் சிலைபோல் நின்றுகொண்டிருந்த மணி, உடனே தன் கைத்தொலைபேசியை வெளியே எடுத்து மருத்துவ வண்டியை அழைத்தான்.

**2. கண் இமைக்கும் நேரத்தில்**, மருத்துவ வண்டி வந்தது. மருத்துவ அதிகாரிகள் மூதாட்டியை வண்டியில் ஏற்றிக்கொண்டு காற்றின் வேகத்தில் புறப்பட்டார்கள். மருத்துவ வண்டியுடன் ஒரு காவல் வண்டியும் வந்திருந்தது. அதிலிருந்த அதிகாரி ஒருவர் நண்பர்களை விசாரித்து சில குறிப்புகளை எடுத்துக் கொண்டார். அவர் சினம் கொண்ட குரலில் “மூதாட்டியை இடித்தது யார்?" என்று கேட்டபோது, பாலு தன் நண்பனைக் காட்டிக்கொடுக்கவில்லை. அதிகாரி இருவரையும் **கடுமையாக**த் திட்டினார். தங்களது தவற்றை எண்ணி வெட்கத்தில் இருவரும் தலைக்குனிந்தார்கள். மணி தான் செய்த தவறை நினைத்து வருந்தினான். அதிகாரி சாலையில் விளையாடுவதனால் ஏற்படும் ஆபத்தை எடுத்துக் கூறிப் புறப்பட்டார்.

**3. "அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்"**

என்ற பழமொழியின் அர்த்தத்தை உணர்ந்த மணியின் **4. கண்கள் கண்ணீரில் மிதந்தது.**

1,2,4. சொற்களஞ்சியம் - Catchy Words 3. பழமொழி - Palamozhi

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + achieve Big

அவன் பாலுவிடம் மன்னிப்புக் கேட்டு தன் பொறுப்பற்ற செயலை மறுபடியும் செய்யப் போவதில்லை என்று **1. உத்திரவாதம்** கொடுத்தான். தன் தவற்றை உணர்ந்த நண்பனை மன்னித்து அவன் நல்ல எண்ணங்களை நினைத்து பெருமை கொண்டான் பாலு. அதன்பின், நண்பர்கள் இருவரும் மூதாட்டியைச் சந்திக்க மருத்துவமனைக்குப் புறப்பட்டார்கள். இருவரும் அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டனர்.

**2. “இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்"**

**3. என்பதற்கு ஏற்ப** மூதாட்டியும் மணி செய்த பொறுப்பற்ற செயலை பெருமனதுடன் மறந்து மன்னித்த அந்த மூதாட்டியின் நற்செயலைக் கண்டு, மணியும் பாலுவும் பூரிப்பு அடைந்தனர். அவர்களுக்கு மூதாட்டி நல்ல எடுத்துக்காட்டாக விளங்கினார்.

1. சொற்களஞ்சியம் - Catchy Words
2. திருக்குறள் - Thirukkural
3. இணைக்கும் வாக்கியம் - Connecting Words

# அருஞ்சொற்பொருள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **மங்கலாக** | - | தெளிவில்லாத (Dimly) |
| 2. | **தத்தம்** | - | அவரவர் (According to one's) |
| 3. | **களிக்கலாம்** | - | மகிழலாம் (Enjoy) |
| 4. | **புன்னகை** | - | சிரிப்பு (Smile) |
| 5. | **கோழைத்தனம்** | - | எதற்கும் பயம் கொள்பவன் (Timid person) |
| 6. | **அத்தருணம்** | - | அந்நேரம் (On that time) |
| 7. | **இரைந்து** | - | சிதறி (Scattered) |
| 8. | **கடுமையாக** | - | மிகவும் பயங்கரமாக (Strictly) |
| 9. | **உத்திரவாதம்** | - | உறுதி (Assurance) |
| 10. | **இன்னாசெய் தாரை** | - | தீமை செய்தவர் (Harmful) |

# பயிற்சி வினா

**இடம்**: வீடு **கருப்பொருள்**: பொறுப்பற்ற செயல்

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிக் குறிப்புகளையும் மனவரைபடத்தையும் இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| கேலிச்சித்திரம் | தண்ணீர் கொதித்தது |
| உணவுச்சண்டை | அடுப்பு |
| கந்தல் துணி | கவனிக்கத் தவறினர் |
| பதற்றத்துடன் | தீப்பற்றியது |

## உதவிக் குறிப்புகள்

- நீண்ட பள்ளி விடுமுறை எங்களைச் சுதந்திரப் பறவைகளாக மாற்றியது
- பெற்றோர்கள் வேலைக்குச் சென்றனர்
- வீட்டுப்பாடங்களை முடித்து கேலிச்சித்திரம் பார்த்தோம்
- மும்முரமாக விளையாட்டில் ஈடுபட்டோம்
- தேநீர் குடிக்க நினைத்தோம்
- அடுப்பில் தண்ணீர் வைத்தோம்
- கவனத்தைச் சிதறவிட்டு உணவுச் சண்டை போட்டோம்
- கவனக் குறைவு
- காரியத்தில் கண்ணாய் இரு
- கந்தல் துணி தீப்பற்றி எரிந்தது
- தண்ணீர் சிதறியது
- பதற்றமடைந்தோம்
- காயம் ஏற்பட்டது
- வெட்கித் தலை குனிந்தோம்

WORDSMITH BEYOND LEARNING

# மன வரைபடம்

**எனது பொறுப்பற்ற செயலால் ஏற்பட்ட பாதிப்பு**

### முன்னுரை
**யார்?**
- நான்
- என் தம்பி

### முன்னுரை
**எப்போது?**
- பள்ளி விடுமுறை
- விளையாடிக் கொண்டிருந்தபோது

### முன்னுரை
**எங்கே?**
- சமையலறையில்

### பொருளுரை
**ஏன்?**
- பொறுப்பற்ற செயலால்

### பொருளுரை
**என்ன நடந்தது?**
- விளையாட்டு மும்முரம்
- உணவுச் சண்டை
- கொதித்து கொண்டிருந்த அடுப்பு
- அடுப்பின் அருகிலிருந்த துணியில் தீப்பற்றியது

### பொருளுரை
**எப்படி தீர்வு காணப்பட்டது?**
- தண்ணீரைக் கொண்டு தீயை அணைத்தல்
- பெற்றோருக்குத் தகவல் தெரிவித்தல்
- காயத்திற்கு மருந்து தடவுதல்

### முடிவுரை
**கற்றுக்கொண்ட பாடம் / நீதி**
- ஒரு செயலில் ஈடுபட்டால் பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டும்

## எனது பொறுப்பற்ற செயலால் ஏற்பட்ட பாதிப்பு

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

WORDSMITH
BEYOND LEARNING